# S.I.R.க்கு எதிராக அணி திரண்ட ‘இந்தியா’ கூட்டணியினர்!



தமிழ்நாட்டில் SIR செயல்படுத்துவதையும் கண்டித்து, மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம், விழுப்புரம் நகரம், புதிய பேருந்து நிலையம் அருகில், நகராட்சி திடலில், விழுப்புரம் மத்திய மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் இரா.இலட்சுமணன் தலைமையில் நடைபெற்றது. மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணை செயலாளர் செ.புஷ்பராஜ் வரவேற்புரை ஆற்றினார். விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி K.S.மஸ்தான் எம்.எல்.ஏ , விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் பொன்.கௌதமசிகாமணி முன்னிலை வகித்தார்கள். கழக துணை பொதுச் செயலாளர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ கண்டன உரையாற்றினார்கள். விழுப்புரம் நாடாளுமன்ற உறுப்பினர் துரை.ரவிக்குமார், விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் சிவா, வி.சி.க துணை பொது செயலாளர் வன்னியரசு உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.




SIR என்கிற சிறப்பு வாக்காளர் சீர்திருத்த சட்டத்தை எதிர்த்து ஈரோடு மாவட்டம் ஒன்றுபட்ட திமுக கழகத்தின் சார்பாக ஈரோடு வடக்கு தெற்கு மத்திய மாவட்ட கழகத்தின் சார்பாக மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்திற்கு வடக்கு மாவட்ட கழக செயலாளர் என். நல்லசிவம் தலைமை தாங்கினார். இந்நிகழ்ச்சியில் கே இ.பிரகாஷ் எம்.பி. கலந்து கொண்டு தேர்தல் ஆணையம் கொண்டு வந்துள்ள ”SIR பற்றி விளக்க உரையாற்றி கண்டனத்தை பதிவு செய்தார். இந்நிகழ்ச்சியில் வி சி. சந்திரகுமார் எம்எல்ஏ, மாவட்ட கழக பொறுப்பாளர் தோப்பு என் டி. வெங்கடாசலம் மாநில நிர்வாகிகள் ம. கந்தசாமி, எஸ் எல் டி ப. சச்சிதானந்தம், குறிஞ்சி என். சிவக்குமார், சிந்து ரவிச்சந்திரன், மாசு ராதாகிருஷ்ணன், சரவணன், வீரமணி, மாவட்ட நிர்வாகிகள் ஆ.செந்தில்குமார், செல்ல பொன்னி, கா சின்னையன், ப க பழனிச்சாமி, மேயர் மேயர் சு. நாகரத்தினம், துணை மையம் வி. செல்வராஜ், மாநகர கழக செயலாளர் மு. சுப்ரமணியன் உள்ளிட்ட அனைத்து நிர்வாகிகள் பங்கேற்றனர்.




செங்கல்பட்டில் தி.மு.க. தலைமை தீர்மானக் குழு செயலாளர் மீ.அ.வைதியலிங்கம் தலைமையில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லா, எம்.எல்.ஏ., இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயற்குழு உறுப்பினர் ஜி.ஆர்.ரவீந்திரநாத் ஆகியோர் கலந்துகொண்டு கண்டன உரையாற்றினர். உடன் சட்டமன்ற உறுப்பினர்கள் இ.கருணாநிதி, எஸ்.ஆர்.ராஜா, வரலட்சுமி மதுசூதனன், எஸ்.எஸ்.பாலாஜி மற்றும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் மாவட்ட தலைவர்கள் மாவட்டச் செயலாளர்கள் உள்ளனர்.




இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க., மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் முத்துக்கடை பேருந்து நிலையத்தில் ஒன்றிய பா.ஜ.க. அரசின் கை பாவையாக செயல்படும் இந்திய தேர்தல் ஆணையத்தைக் கண்டிதது மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம். தி.மு.க. மாநில சுற்றுச்சூழல் அணி துணை செயலாளர் ஆர்.வினோத் காந்திதலைமையிலும் கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் தி.மு.க. கொள்கை பரப்பு செயலாளர் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் கண்டன உரையிலும் மற்றும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது இதில் மாவட்ட நிர்வாகிகள் ஒன்றிய நகர பேரூர் செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழகத்தினர் கலந்து கொண்டனர்.




திருப்பத்தூர் வட்டாட்சியர் அலுவலகம் எதிரில் நேற்று நடைபெற்ற மாபெரும் கண்டன ஆர்பாட்டத்தில் திருப்பத்தூர் மாவட்ட செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி எம்.எல்.ஏ. தலைமை ஏற்று கண்டன உரை நிகழ்த்தினார். எஸ்.ராஜேந்திரன், அ.நல்லதம்பி எம்.எல்.ஏ., அ.செ.வில்வநாதன் எம்.எல்.ஏ., கூட்டணி கட்சியினர் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டார்கள்.




திருவண்ணாமலை மாவட்ட, மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் தேர்தல்ஆணையம் தமிழ்நாட்டில் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு கொண்டு வந்துள்ளதைக் கண்டித்து, மனிதநேய ஜனநாயக கட்சி தலைவர் தமிமுன்அன்சாரி கண்டன உரை நிகழ்த்தினார். உடன் வடக்கு மாவட்டச் செயலாளர் எம்.எஸ்.தரணிவேந்தன், கழக மருத்துவ அணி துணை தலைவர் டாக்டர் எ.வ.வே. கம்பன், சி.என்.அண்ணாதுரை எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், எஸ்.அம்பேத்குமார் ஒ.ஜோதி, ம.தி.மு.க. காரை செல்வராஜ்,காங்கிரஸ் ஜி.குமார், பிரசாந்த், தி.க.மூர்த்தி, மதிமுக சீனி கார்த்திகேயன், எஸ்.கே.ரத்தினகுமார், சி.பி. எம்.ப.செல்வம், சி.பி.ஐ. இரா.திருமலை அய்யம் சுலைமான், பீர்முகமது, சி.நியூட்டன், ப.வளர்மதி, அ.அசுரவடிவேல், ஆரணி முத்து, வெம்பாக்கம் மதியழகன், ஏ.ஆர்.நாசர்உசேன், இரா.அருள், மல்லி வினோத், எச்.ஜமால், சா.சுரேஷ், கேட்குமார், கராத்தே குமார் உட்பட கூட்டணி இயக்கத்தினர் மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள் உடன் உள்ளனர்.




கள்ளக்குறிச்சி மாவட்ட தி.மு.க. கூட்டணி சார்பில், கள்ளக்குறிச்சி கச்சேரி சாலையில் நடைபெற்ற, ஒன்றிய பா.ஜ.க. அரசின் கைப்பாவை யாக மாறி, எதேச்சதிகாரப் போக்கில் இந்தியத் தேர்தல் ஆணையம், தமிழ்நாட்டில் சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு (S.I.R.) கொண்டு வந்துள்ளதைக் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் தெற்கு மாவட்ட கழக செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ தலைமையில், வடக்கு மாவட்டக் கழக செயலாளர் தா.உதயசூரியன் எம்.எல்.ஏ முன்னிலையில், உளுந்தூர்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் ஆ.ஜெ.மணிக்கண்ணன் கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன், மாநில மகளிர் அணி துணைச் செயலாளர் ஆ.அங்கையற்கண்ணி மற்றும் தி.மு.கழகத்தினர், கூட்டணிக்கட்சியினர், பொதுமக்கள் என பல்லாயிரக்கணக்கானோர் கலந்துகொண்டு SIRஐ கண்டித்து பல்வேறு கண்டன முழக்கங்களை எழுப்பினர்.



சென்னை வடகிழக்கு மாவட்ட திமுக மற்றும் திமுக தோழமைக் கட்சிகளின் சார்பில் SIRஜ கண்டித்து மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ தலைமையில் மாதவரம் பஜார் தெருவில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மேற்படி ஆர்பாட்டத்தில் கே.பி.சங்கர் எம்.எல்.ஏ, சமத்துவ மக்கள் கழக தலைவர் எர்ணாவூர் நாராயணன்,காங்கிரஸ் கட்சி மாவட்ட தலைவர் எம்.எஸ்.திரவியம், திமுக மாவட்ட அவைத் தலைவர் குறிஞ்சி எஸ்.கணேசன், பகுதி செயலாளர்கள் ஜி.துக்காராம், தி.மு.தனியரசு, ஏ.வி.ஆறுமுகம், வை.ம.அருள்தாசன், புழல் எம்.நாராயணன், ஒன்றிய செயலாளர்கள் கருணாகரன், தயாளன், அற்புதராஜ், மண்டல குழுத் தலைவர் எஸ்.நந்தகோபால் ஆகியோர் கலந்து கொண்டனர்.